அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம் – 638 401, ஈரோடு மாவட்டம், தமிழ் நாடு.
GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE
(Recognized u/s 2(f) & 12 (B) of the UGC Act, 1956. A Co-educational institution affiliated to Bharathiar University, Coimbatore)
SATHYAMANGALAM - 638 401, ERODE DISTRICT, TAMIL NADU.
www.gascsathy.ac.in e-Mail: gascsathy@gmail.com Phone : 04295-297141

**5.1.1.4 Percentage of Students benefitted by scholarships and freeships provided by the institution, government and non-government bodies, industries, individuals, philanthropists during the last five years.**

**The List of beneficiary students of the post matric scholarship for the academic year 2022-2023**

கல்லூரிக் கல்வித்துறை

அனுப்புநர்

முனைவர்.க.இராதாகிருஷ்ணன்
எம்.எஸ்சி.,எம்.பில்.,பி.எச்டி.,
முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சத்தியமங்கலம் - 638 401.

பெறுநர்

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு மாவட்டம்,
ஈரோடு – 638 011

திருவள்ளுவர் ஆண்டு 2054 (சுபகிருது) மாசி 24
ந.க.எண்: 266/ஈ/2022 நாள்: 08.03.2023

ஐயா,

பொருள்: கல்லூரிக் கல்வித்துறை – சத்தியமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – 2022-23 ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு பயிலும் BC/MBC மாணாக்கர்களின் கல்வி உதவித்தொகை புதியது (FRESH) விவரங்களை அனுப்பி வைத்தல் - தொடர்பாக.

பார்வை: ஈரோடு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அலுவலர் அவர்களின் மின்னஞ்சல் வழி செய்தி நாள்:04-11-2022

********

இக்கல்லூரியில் 2022-23 ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு பயிலும் **165** பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர (**MBC/BC/BC(M)**) மாணாக்கர்களின் கல்வி உதவித்தொகை புதியது (**FRESH**) விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்து அனுப்பியுள்ளோம். மேலும் அதன் நகல் ஒன்றினை இத்துடன் அனுப்பிவைக்கின்றேன்.

| S,No | Batch No | No.Of Student | Amount |
|---|---|---|---|
| 1 | 20220003 | 150 | Rs.694389/- |
| 2 | 20220004 | 14 | Rs.66226/- |
| 3 | 20220005 | 1 | Rs.4776/- |
| Total | | 165 | Rs.765391/- |

முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம்.

இணைப்பு:
1) ஆன்லைனில் பதிவேற்றம் செய்த புதியது 165 மாணாக்கர்களின் விவரங்கள்.

Government Arts and Science College
Sathyamangalam - 638 401.

Principal
Government Arts & Science College
Sathyamangalam

மேற்காணும் விவரங்களை அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் அறிவுரைகளை கடைபிடிக்குமாறு பள்ளிகள் கல்லூரிகளுக்கு அ[illegible]த்தப்படுகிறது. இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்படுகின்றது.

சே. மீனாட்சி
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்
ஈரோடு

/உண்மைநகல்-உத்திரவுப்படி/

தனி வட்டாட்சியர் (கல்வி உதவித் தொகை)

நகல்
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை -5.
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் [illegible] இருக்கை - இருப்பு கோப்பிற்கு.

Principal
Government Arts & Science College
Sathyamangalam
Erode District.

Government Arts and Science College
Sathyamangalam - 638 401.

பதிவஞ்சல் / தனி கவனம்

ஆதிதிராவிடர் நல ஆணையரகம்

கலை & அறிவியல் கல்லூரி
07 DEC 2021
சத்தியமங்கலம்

விடுநர்
திருமதி.சோ.மதுமதி.இ.ஆ.ப.,
ஆணையர்,
ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை–5

பெறுநர்
அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகள்
( மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலகம்
மூலம்)

ந.க.எண். எல்2 /12439 /2021 நாள்: 27 .11.2021.

அய்யா / அம்மையீர் ,

பொருள்: கல்வி – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் – 2021–2022 ஆம் கல்வியாண்டிற்கான இணையதளம் விரைவில் திறபக்கப்படவுள்ளது –ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் இணையவழியில் விண்ணப்பிப்பது – பள்ளி / கல்லூரிகள் அளவில் Scholarship Help Desk உருவாக்குவது – கல்விக் கட்டணம் விலக்களித்தல் – தொடர்பாக

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.09.01.2012
2. அரசாணை (நிலை) எண்.63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.25.06.2012
3. அரசாணை (நிலை) எண்.92, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.11.09.2012
4. ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை 2020–2021 முதல் 2025–2026 வரை போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்ட திருத்திய வழிகாட்டி நெறிமுறை .
5. இவ்வலுவலக கடித எண்.எல்2/12439/2021, நாள்.17.05.2021
6. அரசாணை (நிலை) எண்.72, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.15.10.2021

-----

பார்வை 1 முதல் 3 வரையில் காணும் அரசாணைகளின் படி, சுயநிதி கல்லூரிகளில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடப்பிரிவில் சேர்க்கை பெறும் ஆதிதிராவிடர் , பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் . தகுதிபெற்றிருப்பின், அப்பாடப்பிரிவுகளுக்கு சுயநதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தை அம்மாணவர்கள் கல்லூரிக்கு செலுத்துவதிலிருந்து விளக்களிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4ல் காணும் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை 2020–2021 முதல் 2025–2026 வரை போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்ட திருத்திய வழிகாட்டி நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் பார்வை 5ல் காணும் கடிதம் வாயிலாக மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலமாக பள்ளி/கல்லூரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் அரசாணையின் படி, சுயநிதி கல்லூரிகளில் சேர்ந்துள்ள மாணாக்கர்கள் விரும்பும் பாடப்பிரிவுகளில் கலந்தாய்வு (counselling) மூலம் அனைத்து விதமான அரசு ஒதுக்கீடுகளுக்கான இடங்கள் நிரப்பப்படவில்லை எனில் , அந்நிரப்பப்படாத இடங்களில், மேற்படி சேர்க்கப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களை அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மாற்றம் செய்து, அரசு ஒதுக்கீட்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

தற்போது, 2021–2022 ஆம் கல்வியாண்டிற்கான இணையதளம் விரைவில் திறக்கப்படவுள்ளதால், பள்ளி/கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் இணையவழியில் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க உதவிடவும், கல்வி உதவித்தொகை தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் அளிக்க ஏதுவாக பள்ளி/கல்லூரிகளில்

Facilitation centre / Scholarship Help desk என்ற அமைப்பினை கட்டாயம் உருவாக்கி அதற்கு உரிய அலுவலரை நியமித்து அவ்விவரத்தினை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு 13.12.2021க்குள் தெரிவிக்க வேண்டும்.

பள்ளி/கல்லூரிகளுக்கு இணையவழியில் கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பதில் தகவல் தேவைப்பட்டால் மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறை மற்றும் அரசாணைகளின் படி தகுதியுடைய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் வரை அம்மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் வசூலிக்க கூடாது எனவும், இப்பொருண்மையில் எவ்வித புகார்களுக்கும் இடம் அளிக்கா வண்ணம் செயல்படவும், அனைத்து பள்ளி/கல்லூரி முதல்வர்களையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது

இக்கடிதத்தினை பள்ளி/கல்லூரியில் பயிலும் மாணாக்கர்கள் அறியும் வண்ணம் தகவல் பலகையில் விளம்பரபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், இக்கடிதத்தை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/– சோ.மதுமதி
ஆதிதிராவிடர் நல ஆணையர்
27.11.2021
ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக

நகல்,

அரசு முதன்மை செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 09 (தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

357

மின்னஞ்சல் மூலமாக

அனுப்புநர்
திருமதி.மா.வாணிலட்சுமி ஜெகதாம்பாள்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

பெறுநர்
முதல்வர்
அனைத்து அரசு , அரசு உதவி பெறும்
கல்லூரிகள்
ஈரோடு மாவட்டம்

ந.க.எண்: 32118 / 2020 / த4, நாள்: 28.12.2020

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - கல்வி உதவித் தொகை -2020-2021-ஆம் ஆண்டு - உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதி வாய்ந்த மாணாக்கர்களின் விண்ணப்பங்களை 10.01.2020-க்குள் சமர்ப்பிக்க கோருதல் - தொடர்பாக

பார்வை : சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ஜே2 / 29179 / 2020 நாள்: 17.12.2020

-----

2020-2021-ஆம் கல்வியாண்டிற்கு அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கு பார்வை 2-ல் காணும் செயல்முறையின்படி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதி வாய்ந்த மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்களை கீழ்க்காணும் நிபந்தனைகளை பின்பற்றி விண்ணப்பங்களை பெற்றிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நிபந்தனைகள் :

1. 2020-2021-ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் தகுதி பெற்றவர்கள்
2. பெற்றோரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்
3. மாணாக்கர்களின் வங்கி கணக்கில் மட்டுமே உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்
4. ஆதிதிராவிடர் , பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித் தொகை வழங்கலாம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

(262)

அனுப்புநர்

திரு.வை.இளங்கோ, பி.எஸ்.சி.,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

பெறுநர்

அனைத்து- கல்லூரி முதல்வர்கள்
ஈரோடு மாவட்டம்.

அரசு கலை & அறிவியல் கல்லூரி
20 JUL 2021
சத்தியமங்கலம்

ந.க.15348/2021/ந8

நாள் : .07.2021.

ஐயா,

பொருள்:- கல்வி உதவித்தொகை - ஈரோடு மாவட்டம் - பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - 2021-22 ஆம் ஆண்டில் புதியதாக சேர்க்கப்பட வேண்டிய கல்வி நிறுவனங்கள், புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகள், சிறப்புக்கட்டணம், தேர்வுக்கட்டணம் மாற்றம் செய்ய விபரங்கள் கோருதல் -தொடர்பாக.

பார்வை:- இயக்குநர் , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை அவர்களின் கடித எண். டி1/2877/2021 நாள்: 12.07.2021.

0000

ஈரோடு மாவட்டம் 2021-22 ஆம் கல்வியாண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் மூலம் கல்வி உதவித்தொகை பெறும் பொருட்டு புதியதாக சேர்க்கப்பட வேண்டிய கல்வி நிறுவனங்கள், புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகளை பதிவுசெய்தல், சிறப்புக்கட்டணம், தேர்வுக்கட்டணங்களில் உள்ள மாற்றத்தினை பதிவுசெய்தல் போன்ற விவரங்களை இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து, (இரு நகல்கள்) இவ்வலுவலகத்திற்கு 09.08.2021க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குறித்த காலத்திற்குள் அனுப்பாத இனங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ள இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு:- படிவம் 1,2,3.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு

நகல்:
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

கல்வி உதவித்தொகை ஒப்பளிப்புதல்/ பிரகாம் அமைப்பு

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை,
சென்னை-5.

டி1 / 2640 /2020

நாள். 05.09.2020

<u>சுற்றறிக்கை</u>

பொருள் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நலம் – கல்வி உதவித்தொகை – 2020– 2021ஆம் ஆண்டில் புதியது மற்றும் புதுப்பித்தல் கேட்புகளை ஒப்பளிப்பு செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் தொடர்பாக

---

இத்துறை மூலம் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களின் மூலம் தகுதியான அனைத்து கல்லூரி மாணவ / மாணவியர்களுக்கும் மாவட்ட அளவில் மின்னணு பரிமாற்றம் வாயிலாக கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. 2016–17 முதல் துறைத் தலைமையிடத்திலிருந்து நேரடியாக மாணவர்களின் வங்கி கணக்கிற்கு மின்னணு பரிமாற்றம் மூலமாக கல்வி உதவித்தொகை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது (Centralized payment).

2) தற்போதைய நிலையில் கோவைட்–19 தீநுண்மி காரணமாக கல்வி நிறுவனங்கள் திறப்பு தாமதமாகும் சூழ்நிலை இருப்பினும் இத்திட்டத்தினை நடப்பாண்டில் (2020–21) செம்மையாக செயல்படுத்த, எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து பின்வரும் விவரக்குறிப்புகள் தயார் செய்யப்பட்டு அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கும் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>1.செய்தி குறிப்பு:</u>

முதற்கட்டமாக கல்வி உதவித் தொகை திட்டங்கள் தொடர்பாக, அனைத்து கல்வி நிறுவனங்களும், மாணவ / மாணவியரும் பொது மக்களும், அறியும் வண்ணம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக <u>செலவினமில்லா பத்திரிக்கை செய்தி (இணைப்பு–IV) (News Items), ஒன்றை வெளியிட கேட்டுக்</u> கொள்ளப்படுகிறது. (மாதிரி பத்திரிகை செய்தி இணைப்பு-IVஇல் இணைக்கப்பட்டுள்ளது)

<u>2.கால நிர்ணயம்:</u>

நடப்பு 2020-21-ஆம் ஆண்டில் கல்வி உதவித்தொகை திட்டங்களை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் செயல்படுத்தி மாணவ/மாணவிகள் பயனடைவதற்கு ஏதுவாக திட்டகால விவர அட்டவணை தயார் செய்யப்பட்டு இணைப்பு-Iல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

<u>3.கல்வி உதவித்தொகை திட்ட விவரம்:</u>

கல்வி உதவித்தொகை திட்டங்களில் கல்வி உதவித்தொகைகளுக்கான கேட்புகளைப் பரிசீலித்து ஒப்பளிப்பதற்கு முன்பு, மேற்கொள்ள வேண்டிய விவரங்கள் குறித்து இணைப்பு -IIஇல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றை கவனத்தில் கொண்டு செயல்படுத்திட வேண்டும்.

4. கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை

புதியது/ புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை தொடர்பாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்கள் கல்லூரி முதல்வர்களிடமிருந்து பெற வேண்டிய சான்றுகள் குறித்த விவரம் இணைப்பு-III இல் வழங்கப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

தகுதியான மாணவ/மாணவியர்களுக்கு விடுதலின்றி உடனடியாக கல்வி உதவித்தொகை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு 2019–20ம் ஆண்டு முதல் கல்வி உதவித்தொகை பெற ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. ஆதார் எண் இணையப்பெற்றுள்ள மாணவர்களின் வங்கி கணக்கிற்கு மட்டுமே கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்கள் கூட்டம் ஒன்றை கூட்டி, கல்வி உதவித்தொகை திட்டத்தை நல்லமுறையில் துரிதமாக செயல்படுத்துவது தொடர்பான விவரங்களை தெரிவித்து, அவர்களின் ஒத்துழைப்பினையும் பெற்று 2020–21 ஆம் நிதியாண்டில் கல்வி உதவித்தொகை திட்டத்தினை செயல்படுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இச்சுற்றறிக்கையினை இணைப்புகளுடன் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிட அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கையினை பெற்று கொண்டதற்கான ஒப்புதலினை மறு அஞ்சலில் உடன் அனுப்பி வைப்பதுடன், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை, தனியே அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு – I, II, III & IV

ஒம்/– சி.காமராஜ்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்

நகல்

1. இயக்குநர்,
   மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை–5
2. இருப்புக்கோப்பு– டி1

211

அனுப்புநர்
திரு.வை.இளங்கோ,பி.எஸ்.சி.,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு.

பெறுநர்
1. முதன்மை கல்வி அலுவலர், ஈரோடு
2. மாவட்ட கல்வி அலுவலர்கள் - ஈரோடு/
கோபிசெட்டிபாளையம்/
பவானி/ சத்தியமங்கலம்,
3. வட்டார கல்வி அலுவலர்கள் -
அம்மாபேட்டை/அந்தியூர்/பவானிசாகர்/
பவானி/சென்னிமலை/ஈரோடு/
கோபிசெட்டிபாளையம்/கொடுமுடி/
மொடக்குறிச்சி/ நம்பியூர்/ பெருந்துறை/
சத்தியமங்கலம்/டி.என்.பாளையம்/தாளவாடி
4. கல்லூரி முதல்வர்கள், ஈரோடு மாவட்டம்

அரசு கலை & அறிவியல் கல்லூரி 28 SEP 2020 சத்தியமங்கலம்

ந.க.16208/2020/ந8 நாள்: 29.09.2020

அய்யா/அம்மையீர்,

பொருள்:- பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - கல்வி உதவித் தொகை 2020-21ஆம் ஆண்டிற்கு மாணவ/மாணவியர்களுக்கு வழங்குதல் குறித்து ஆய்வுக்கூட்டம் நடத்துதல்- தொடர்பாக.

பார்வை:- சென்னை பிற்டுத்தப்பட்டோர் நலத்துறை,இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.டி1/2640/2020 நாள்.05.09.2020.

---

ஈரோடு மாவட்டத்தில் இயங்கி வரும் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில், அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் (பி.சி, எம்.பி.சி, டி.என்.சி) வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு 2020-2021ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் தொடர்பாக, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், உதவிக்கல்வி அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களுடன் கூட்டம் நடத்தி கல்வி உதவித்தொகை திட்டங்கள் குறித்து கலந்தாலோசிக்க பார்வையில் காணும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் 30.09.2020 அன்று மாலை 04.45 மணிக்கு மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தின் 2 வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளதால் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்)வை.இளங்கோ,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு

//உண்மை நகல்//

கண்காணிப்பாளர்

213

அனுப்புநர்

திரு.சி.சைபுதீன்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு.

பெறுநர்

கல்லூரி முதல்வர்கள்,
ஈரோடு மாவட்டம்.

ந.க.எண்: 14816/2019/ந8

நாள்: 06.11.2019

அய்யா,

பொருள்: கல்வி உதவித்தொகை -ஈரோடு மாவட்டம் - பிற்படுத்தப்பட்டோர் நலம்-2019-20-புதுப்பித்தல்(Renewal) விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் விரைந்து முடிக்க கோருதல்- தொடர்பாக.

பார்வை:
1. சென்னை,பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் கடித எண்: டி1/5018/2019 நாள்:21.10.2019
2. சென்னை,பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் கடித எண்: டி1/3997/2019 நாள்:04.11.2019

****

ஈரோடு மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர் ,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ/ மாணவியருக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகையினை இந்தியன் போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கியினை (Indian Post Payments Bank-IPPB) மூலம் வழங்க வங்கியின் IFSC Code மற்றும் MICR code -னை உபயோகித்துக்கொள்ளவும், இக்கணக்கு பூஜ்ஜிய நிலையில் (Zero balance) வங்கி கணக்கு துவங்க மற்றும் பராமரிக்க இயலும் என்பதை பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2019-20 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் கல்வி நிலையங்கள் பதிவேற்றம் செய்ய ஏதுவாக முதற்கட்டமாக புதுப்பித்தல்(Renewal) விண்ணப்பங்கள் மட்டும் 31.10.2019 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

எனவே புதுப்பித்தலுக்கான(Renewal) விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க 30.11.2019 அன்று வரை கால வரையறை செய்யப்பட்டுள்ளது என பார்வை 2-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2019-20 ஆம் ஆண்டில் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களை 30.11.2019 அன்றுக்குள் காலதாமதமின்றி விரைவில் முடிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இப்பணிகள் குறித்து இடர்பாடுகள் இருப்பின் உடனடியாக இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: சென்னை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் அவர்களின் கடித நகல்

(ஒம்)/-சி.சைபுதீன்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர், ஈரோடு

//உண்மை நகல்//

கண்காணிப்பாளர்
6/11/19

7 NOV 2019

அனுப்புநர்
சி.சைபுதீன்
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு.

பெறுநர்
அனைத்து கல்லூரி முதல்வர்கள்,
ஈரோடு மாவட்டம்.
(பிவ/மிபிவ/சீம கல்வி உதவித் தொகை பெற இணையதளத்தில் பதிவு பெற்ற கல்லூரிகள் மட்டும்)

ந.க.எண்:14816/2019/ந8 நாள்: 03 .01.2020

அய்யா,

பொருள்: பிவ, மிபிவ (ம) சீம நலம் - கல்வி உதவித் தொகை திட்டம் - 2019-20 ஆம் ஆண்டு புதியது (FRESH) விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் 23.12.2019 முதல் 30.01.2020-க்குள் விண்ணப்பிக்க அறிவுரைகள் வழங்குவது - தொடர்பாக.

பார்வை: சென்னை, பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களின் கடித எண்: டி1/3997/2019 நாள்: 23.12.2019

○○○○○

பார்வையில் காணும் கடிதத்தில் அரசு, அரசு உதவி பெறும் கல்லூரி மற்றும் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் 2019-2020ஆம் ஆண்டு புதியதுக்கான (Fresh) விண்ணப்பங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்க 31.01.2019 அன்று வரை கால அவகாசம் வரையறை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 2019-2020ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை புதியதுக்கான விண்ணப்பங்கள் குறித்த கால வரையறைக்குள், எவ்வித தகுதியான விண்ணப்பங்களும் விடுதலின்றி, விரைவாக ஆன்லைனில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

மேலும் தகுதியான விண்ணப்பங்கள் ஏதேனும் ஆன்லைனில் விண்ணப்பிக்காமல் விடுபட்டிருந்தால் தொடர்புடைய முதல்வர்கள் பொறுப்பாவார்கள். மேலும், கல்வி உதவித்தொகை தொடர்பாக ஏதேனும் இடர்பாடுகள் எழும்பட்சத்தில் உடன் இவ்வலுவலகத்தினை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், 2019-20ஆம் கல்வி ஆண்டில் கல்வி உதவித்தொகை பெற தகுதியான மாணவ/மாணவியர்களுக்கு புதியது மற்றும் புதுப்பித்தல்(Fresh& Renewal )விண்ணப்பங்கள் அனைத்தும் விடுபடாமல் ஆன்லைனில் பதிவேற்றம் செய்து முடிக்கப்பட்டதற்கான சான்றினை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: கல்லூரி முதல்வர்கள்
தர வேண்டிய சான்று நகல்

(ஒம்)/-சி.சைபுதீன்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
ஈரோடு.

//உண்மை நகல்//

கண்காணிப்பாளர் 3/1/2020

03/01/2020

PTO